<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.207/2011</u>
<u>நாள். 24.03.2026</u>

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24.03.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = திரு. கவிமணி<br>கிராம நிர்வாக அலுவலர், திருமங்கலம் | தகப்பனார் பெயர்= திரு. |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==========================================================

**<u>DW4 மு.வி</u>**

1) நான் திருமங்கலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பாணையில் உள்ள ஆவணத்தை கொண்டுவந்துள்ளேன். நான் திருமங்கலம் கிராமத்திற்கான பசலி ஆண்டு 1434 ற்கான சாகுபடி அடங்கலை கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் யார் என்றால் நான் விடுப்பில் இருந்ததால் திரு. ஞானராஜ் என்பவர் கொடுத்துள்ளார்.

2) பொதுவாக அடங்கல் பதிவேட்டில் 6வது காலத்தில் பட்டாதார் சாகுபடி செய்பவர் பெயர் என குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஒரு நிலத்தில் யார் சாகுபடி செய்கிறார்களோ, அதனை விசாரணை செய்து எங்களது அலுவலகத்தில் அடங்கல் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் தற்போதும் திருமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக தான் உள்ளேன் என்றால் சரிதான்.

3) புல எண்.28/2Bல் உள்ள நிலத்தை கோவிந்தன் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் விசாரணை செய்தால் தான் சொல்லமுடியும். நான் எத்தனை வருடங்களாக திருமங்கலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன் என்றால் இது 3வது வருடம். கடந்த 3 ஆண்டுகளில் மேற்படி புல எண்ணை யார் சாகுபடி செய்தார்கள் என்றால் நியாபகம் இல்லை.

4) எனக்கு முன்பாக பணி செய்த கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் வழங்கியிருந்தால் விசாரணை செய்து தான் வழங்கியிருப்பார் என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை</u>

1) எங்களது அலுவலக திருமங்கலம் கிராமத்திற்கான 1434 பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கில் புல எண்.28/2B ல் கோவிந்தன் பெயர் இதுவரையில் பதிவாகியுள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ.1ல் புல எண்.28/2B ல் பயிர் பார்வையிடும் அலுவலர் குறிப்பு என்ற 19வது காலத்தில் விபரம் இல்லை என்றால் வருவாய் ஆய்வாளரோ, வட்டாட்சியரோ ஆய்விற்கு வரும்பொழுது பதிவு செய்வர்.

2) வருவாய் ஆய்வாளரோ, வட்டாட்சியரோ அடங்கல் கணக்கிற்கான நகலை வழங்கும் பொழுது உரிய அடங்கல் பதிவேட்டினை பார்த்து 19வது காலத்தில் பதிவு செய்தே நகல் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல, ஸ்தல ஆய்வின்போது மட்டுமே அதில் வருவாய் ஆய்வாளரோ, வட்டாட்சியரோ பதிவு செய்வர். ஒரு அடங்கல் நகலை வருவாய் ஆய்வாளரோ, வட்டாட்சியரோ வழங்கும்பொழுது தணிக்கை செய்து தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

3) நான் இன்று கொண்டுவந்துள்ள திருமங்கலம் கிராமம் 1434 ம் பசலி ஆண்டிற்கான அடங்கல் பதிவேட்டில் வருவாய் ஆய்வாளரோ, வட்டாட்சியரோ தணிக்கை செய்ததாக 19 வது காலத்தில் எவ்வித பதிவும் இல்லை என்றால் சரிதான். வருவாய் அலுவலகத்தில் ஒரு நகலை பெற வேண்டும் என்றால் உரிய முறையில் மனு செய்து, அதற்குரிய கட்டணத்தை செலுத்தி அடங்கல் நகலை பெறவேண்டும் என்றால் சரிதான்.